உ

சிவமயம்.

"துறவி"

1955.

மன்மத மலர் 1	திங்கள் வெளியீடு.	புரட்டாசி இதழ் 9

தமிழ் நாட்டுத் துறவிகள் சங்கம்,

திருவண்ணாமலை.

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு"

பதிப்பாளர்:-

சுவாமி சொருபானந்தா.

ஆண்டுக் கட்டணம் ரூ 2/- தனி இதழ் அணா 3/-

"துறவி"

பொருளடக்கம்.

ஓம் :

"துறவி"

மன்மத மலர் 1	தமிழ் திங்கள் வெளியீடு.	புரட்டாசி இதழ் 9

கடவுள் வாழ்த்து.

"வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான் மனநின்பால்
தாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டிச்
சூழ்த்துமது கரமுரலுந் தாரோயை நாயடியேன்
பாழ்த்தபிறப் பறுத்திடுவான் யானுமுன்னைப் பரவுவனே."

திருவாசகம்.

நாகரீகம்.

நாம் ஒவ்வொருவரும் நாகரீகமாக வாழவேண்டும், வாழப்பழகிக் கொள்ளவும் வேண்டும். அவை சமய நல்லொழுக்கத்திற்கும் நாட்டின் பண்பாட்டிற்கும் ஒத்ததாக இருக்கவேண்டும். அவ்வாறொழுகின் அவை உடலுக்கும் உயிருக்கும் உறுதிபயப்பனவாகும். இன்றைய நாகரீகம் அநாகரீகத்தின் சிகரமாக இருப்பது வெளிப்படை. நம் நாடுசெய்த தவம் இவ்வாறாயிற்றே என வருந்த வேண்டிய நிலையிலிருக்கிறது. உடையிலும், உணவிலும், வாகனாதிகளிலும் மாட மாளிகையாதிகளிலும், இன்னும் மனம் விரும்பியவைகளிலும் நாகரீகத்தைக் காண்கின்றோம். அவை பொருளை விரயமாக்குவதன்றி உடலுக்கும் உயிருக்கும் பிணியையும் உண்டாக்குகின்றது. உடலும் உள்ளமும் தூய்மையாக இருப்பது தான் நாகரீகம்.

இனிமக்கள் விழித்தெழும் காலம் வந்துவிட்டன. உண்மையை உணரும் ஆர்வம் மக்களின் உள்ளத்தில் தோன்றிவிட்டன இதற்குக்காரணம் சில துறவிப் பெரியார்களும் இல்லற அன்பர்களும் ஆவனசெய்ய விழைந்து முன்வந்துள்ளதே. சிறப்பாக நம் அருந்தவப் பெரியார் திருவண்ணாமலை ஆதீனம் குன்றக்குடி அடிகளாரவர்கள் "கருமமேகண்ணாயினர்" என்ற குமர குருபரரின் அருண் மொழிக்கு இலக்காயினர்கள். நம் நாடு நலம்பெற அவர்கள் புரியும் தொண்டு மிகச் சீரியதாகும். அச்சீரிய சிந்தனையாளரின் தொண்டு நம் தமிழகத்தில் வேரூன்ற துறவிகளும் அன்பர்களும் முன்வந்து ஆவன செய்வார்களேயானால் நம் தமிழகம் உயிருள்ள தமிழகமாக இலங்கும் என்பதில் ஐயமில்லை. இவை முற்றுப்பெற எல்லாம்வல்ல இறைவன் திருவருள்புரிவாராக.

கந்தரநுபூதி - பொழிப்புரை.

(சாந்தி ஆஸ்ரமம், காரியானூர்.)

நெஞ்சக் கனகல் லுநெகிழ்ந் துருகத்
தஞ்சத் தருள்சண் முகனுக் கியல்சேர்
செஞ்சொற் புனைமா லைசிறந் திடவே
பஞ்சக் கரவா னைபதம் பணிவாம்.

பொ... ரை. வலிதாகிய மனக்கல்லு கரைந்துருகுமாறு (தொண்டர்களுக்கு) அடைக்கல ஸ்தானமாயிருந்து அநுக்கிரகம் பண்ணுகின்ற ஸ்ரீ ஷண்முகப்பெருமானுக்கு இலக்கண அமைதியுள்ள நல்ல சொல் மலரால் தொடுக்கப்பட்ட பாமாலையைச் சிறப்பாகச் சாத்துவதில் (இடையூறு வாராது காத்தற்பொருட்டு) ஐந்து கரங்களை-யுடைய ஸ்ரீ யானைமுகப்பிள்ளையார் சீர்பாதங்களை வணங்குவாம்.

நூல்.

ஆடும் பரிவே லணிசே வலெனப்
பாடும் பணியே பணியா வருள்வாய்
தேடும் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியா னைசகோ தரனே.

பொ....ரை. போரின் பொருட்டுத் தேடப்படுகின்ற கஜமுகாசுரனை யுத்தகளத்திலே கொல்லுகின்ற ஒப்பற்ற கஜமுகவிக்கிநேசுரர் சகோதரராகிய முருகப்பெருமானே நடனமிடுகின்ற மயில்வாகனத்தை யுடையவரே வேலாயுதத்தைத் தாங்கியவரே அழகிய சேவற் கொடியை யுடையவரே என்று தேவரீரைப் புகழ்ந்து தோத்திரம் பண்ணுகின்ற தொண்டையே அடியேனுக்குத் தொண்டாக அருளுதல் வேண்டும்.

2 உல்லா சநிரா குலயோ கவிதச்
சல்லா பவிநோ தனுநீ யலையோ
எல்லா மறவென் னையிழந் தநலஞ்
சொல்லாய் முருகா சுரபூ பதியே.

பொ ...ரை. எப்போதும் இளமைப்பருவ முடையவரே தேவசேனா பதியே மனதுக்குப் பேரானந்தத்தையும் கவலையில்லாத தன்மை-யையுங்கொடுக்கின்ற * இயமாதி எட்டுறுப்புக்களை யுடைய யோகத்தை (அகஸ்தியர் முதலிய மாணுக்கர்களுக்கு) உள்ளபடி உபதேசிக்கின்ற ஞான லீலையைச் செய்பவரும் தேவரீரல்லவா ஆதலால் எனக்குள்ள சகல பற்றுக்களும் கெட ஜீவபோதங்கெட்ட முத்திநிலையை அடியேனுக்கு அநுக்கிரகஞ் செய்தல் வேண்டும். * இயமாதி எட்டுறுப்பாவன :— இயமம், நியமம், ஆசனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்னுமிவையாம். இவற்றின் விரிவை ஈசுரகீதை முதலியவற்றிலுணர்க. (தொடரும்)

அறிவுரைத் திரட்டு.

செந்தமிழ்த் தேனீ திரட்டியது.

1 நீ உன்பாலுள்ள வஞ்சகத்தைப் பிறரை வஞ்சித்துக் கெடுப்பதற்குப் பயன் படுத்தாதே. ஆனால் உன்னை வேறு ஒருவர் வஞ்சித்துக் கெடுப்பதற்கும் விடாமல் தப்பித்துக் கொள்வதற்குப் பழகிக்கொள்.

2 அற்ப விஷயங்களில் கூட உன் பிடிவாதத்தையும் முரட்டுத் தனத்தையும் விடாமலிருந்து உன் எண்ணத்தை நிறைவேற்றிக் கொள்வதால் உன் உள்ளத்தில் மட்டுமே மகிழ்ச்சி உண்டாகிறது. அதற்குப் பதிலாக பிடிவாதக்காரன், கெட்டவன் முரடன் என்பதாகப் பிறர் கூறும் நிந்தையே பயனாகக் கிடைக்கிறது ஆதலினால் முக்கிய மான சிறந்த காரியங்களில் மட்டுமே அவ்வாறு நடந்து கொண்டு அற்பவிஷயங்களில் பிடிவாதத்தை விட்டுக்கொடுத்துப் பின்வாங்கிக் கொண்டால் பெரியதொரு நட்டம் வரப்போவதில்லை. எல்லாருடைய நன்மதிப்பையும் பெறலாம்.

3 சுடாயல் சுட்டிக் கூறினாலுங் கூட சிலருக்கு அவைபடாமலே போய் விடுகிறதே என்று ஆச்சரியப்பட வேண்டாம். தன்காரியப் புலியாய் விளங்குகின்றவர்கட்கு உரிய இயல்பு அது. இதனால் சிலர் புத்தி மந்தம் காரண மாகவும் இருக்கிறார்கள்.

4 நம்மிடம் பேச்சைத் தொடங்கும் போதே சிறிது நேரத்தில் நம் உள்ளத்தின் உள்ளே இருப்பதையுங்கூட அறிந்துகொள்கின்றனர் நாம் அவர்கள் உள்ளத்தை அறிய முடிவதில்லை. அறிந்து கொள்ளும் வகையில் அவர்கள் இருப்பதும் இல்லை, இத்தகையவர்களிடம் ஒரு முறை பழக நேர்ந்தால் பின்னர் எச்சரிக்கையாக இருத்தல் நல்லது,

5 பலகுற்றங்களை உன்பால் சார்த்தி உன்னைப் பிறர் நிந்திக்கின்ற போது அதற்காகச்சினந்து நீயும் அவர்களை நிந்தைசெய்யாமல் அவர்கள் கூறும் குற்றங்கள் உன்பால் இல்லையாயின் நம்பால் இல்லாத குற்றங்களை நமமீது எற்றிக் கூறுவதனால் நமக்கு வரும்கேடு ஒன்று மில்லை என்று விடவேண்டும். அஃது உன்பால் உளதாயின் அதனை யுணர்ந்து அக்குற்றங்களைக் கைவிடவேண்டும்.

6 ஒருவர் நம்மிடம் அடிக்கடி நெருங்கிப்பழகும் வாய்ப்பிருக் கையில் அவருடைய குணங்களைக்காட்டிலும் குற்றமே அதிகமாகத் தோன்றுகின்றன, சற்றுவிலகிவிடும் போது அவர்களிடம் உள்ள குணங்கள் மாத்திரம் நினைவுக்கு வருகின்றன.

7 பிறரை இழித்தும், தாக்கியும், அவமதித்தும் பேசுவதனாலே யே தனக்குப் பெருமை ஏற்படுவதாக எண்ணி அவ்வாறுபோசிச் சிலர் தற்பெருமை யடைகின்றனர் தொடக்கத்தில் ஏதோ பெருமை ஏற்படுவதுபோல் இருந்தாலும், அடுத் தடுத்து இந்நிகழ்ச்சியைக் காண்பவர்கள் அருவருப்படைவதால் பெருமைக்குப்பதில் சிறுமையே அடைய நேருகிறதென்பதை உணரவேண்டும்.

8 தம்மிடமுள்ள பொருளை அதிகப்படுத்த வேண்டுமாயின் தருமநெறியிலீட்டிய பொருள்களையே சேர்க்கவேண்டும். அப்போது பாலோடு பால் சேர்க்கின் அதிகமாவதுபோல் அதிகமாகும். தருமநெறியிலீட்டாத பொருள்களையும், கடவுளுக்குரிய தேவாலயச்சொத்துக்களையும், அடியார்கட் குரியவைகளையும் சேர்த்து அதிகப்படுத்த முற்படின் பாலோடு மோரைச் சேர்க்கின் பால் எவ்வாறு கேடுறுமோ அதுபோல முன்னைப் பொருள்களோடு அழிவதாய் முடியும்.

9 சட்டத்திற்கும், அவமானத்துக்கும் பயந்து அதற்காக நன்னெறியில் நடப்பது என்னும் கொள்கையோடிருந்தால் ஒவ்வொரு சமயங்களில் பிறரறியாத நிலையில் தீய நெறியிற் செல்லுவதற்கும் மனம் இசையும். ஆதலால் தம்மனத்தோடு பொருந்தத் தூயநெறியில் நிற்பதையே கொள்கையாகக் கடைபிடிக்க வேண்டும்.

10 இருபதுவயதில் கல்வி, முப்பதில் பொருள், நாற்பதில் ஞானம் என்பதாக இம் மூன்றிலும் ஓரளவு வெற்றி கண்டால்தான் பின்னுள்ள வாழ்நாட்களிலாவது அம்மூன்றினையும் அபிவிர்த்திசெய்து அவைகளின் பலனைப் பெறுவதற்கு ஏதுவாகும்.

பொருள்.

தவத்திரு ஐயாறு அடிகள்
(சித்தபாலையதேசிகர் அதீனப்புலவர், அடிவாரம், பழநி.)

முன் (ம 1 இ 8 ப 105) தொடர்ச்சி.

திருவள்ளுவர் திருக்குறளுக்கு "பொருளுரை" என்று "மணிமேகலை" என்னும் நூலாசிரியராம் தண்டமிழாசான் சாத்தனர் பெயர் கொடுத்தார்.

"தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழு தெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை என்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேராய்"

மணிமேகலை. பொருளும்-கல்வி, செல்வம், கேள்வி, அறிவு, அன்பு, அருள்எனப் பல திறப்படுவதாகும். முதற்கண் இவ்வுலகவாழ்விற் கின்றியமையாத செல்வப் பொருளினைப்பற்றிச் சிறிதாராய்வாம். ஒருவன் கைப்பொருளுடையனாய் இருப்பானேல் அவனைக்கண்டவர் அனைவரும் வணக்கம் செய்து எதிர் கொள்வர். வறுமையாளனை என்னென்பாருமிலர்.

"பொருளுண்டாய்ச் செல்லக்காணிற்
போற்றிஎன்றேற்றெழுவர்" ஆழ்வார்.

வண்டுகள் மலர்கள் நிறைந்த மரங்களைத்தான் நாடுவன. அதுவேபோல, பொருளுடையவனைத்தான் எல்லாரும் நாடுவர். செல்வம் உண்டாய காலத்திலே அவனுக்குத் தொண்டராய்ப் பலர் தொழுவர். யாதொரு பொருளாகவும் மதிக்கத்தகாதவரும், இழிகுணமும், இழி தொழிலும் உடையவரும் ஆய கீழ்மக்களாயிருப்பினும் செல்வ முடையராயின், அவரிடத்தே தான் அனைவரும் அணுகுவர். "கைத்துடையான் காற்கீ ழொதுங்கும் கடல்ஞாலம்" குமரகுருபரர்.

பொருளியல்—நாடு, அரண், பொருள் செயல்வகை, படைமாட்சி, படைச்செருக்கு என்ற ஐந்து அதிகாரங்களைத் தன்னகத்தே கொண்டது. இவ்வைந்து அதிகாரங்களுள் நடுவின்கண் நின்றிலங்குவது "பொருள் செயல்வகை" அறம், பொருள், இன்பம், என்ற மூன்றனுள்ளும் நடுவணதாக நின்றிலங்குவது "பொருள்"

அருளுடனும், அன்புடனும் செல்வத்தினைத் தேடல் வேண்டும். அன்பினல் பெறப்பட்டதும் "அருட்செல்வம் செல்வத்துட் செல்வம்" என்று நமது திருவள்ளுவப் பெருந்தகையாரால் சிறப்பிக்கப்பெற்றதும், பொருள் என்னும் செல்வச் செவிலியால் நன்கு வளர்வதாகும் செல்வம் தன்னையுடையானுக்கு, வெற்றி, மேன்மை, கல்வி, அழகு முதலிய ஆக்கங்கள் பலவற்றை அளிக்க வல்லது.

ஒரு நாடானது குறைவில்லாமல் நெல் முதலியவற்றை விளைவிக்கும் உழவர்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். பகைவர், நண்பர், அயலவர் என்னும் மூவகையாரிடத்தும் நடுநிலை திறம்பாது நிற்கும் நன்னெறியாளராம் நல்லோர்களைத் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். மேன் மேலும் வளரும் செல்வம்உடைய சீரியோர்களையும் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும். நிறைந்த பெரும் பொருளினையுடைமையால் பிறநாட்டவராலும் விரும்பத்தக்கதாய் இருத்தல் வேண்டும் யாதொருவிதமான கெடுதலும் இன்மையால் நிறைந்த விளை பொருளினை யுடையதாய் இருக்தல் வேண்டும். பிறநாட்டவர் எத்துணையோர்வந்து குடியேறினும் அவர்களைத் தாங்கவல்லதாய் இருத்தல்வேண்டும் பசிப்பிணி என்பதே இல்லாததாய் இருத்தல்வேண்டும். நோயின்மை, செல்வம், விளைவு, இன்பம், பாதுகாவல் என்ற இவ்வைந்தனையும் நாட்டிற்கு அணிகலம் என்று ஆன்றோர் கூறுவர். இங்ஙனம் செல்வப்பொருள் முதலியவற்றால் நாடு நலனுற வேண்டுமேல் அரசியலமைதி நன்றே அமைதல் வேண்டும் அரசனானவன் மேன்மேலும் செல்வம் வருதற்கேதுவாய துறைகள் பலவற்றை நாட்டில் உண்டாக்க வேண்டும். வந்த பொருள்களை ஒருவழித்தொகுக்க வேண்டும். தொகுத்த பொருள்களை அறம், பொருள், இன்பங்களின் பொருட்டுச் செலவிடல் வேண்டும். இச் செயல்களில் வல்லவனே அரசன். இத்தகைய மன்னனது நாட்டினையே எவ்வுலகினும் உயர்ந்த தென்று உலகம் கூறும் மன்னவன் கோன்முறை வழுவாதிருக்குமேல கோள்கள் நெறி தவறாது செல்வனவாகும். அங்ஙனம் செல்லின் மழையின்மையாலும் அதிக மழையாலும் கேடுண்டாகாமல் மழை அளவாகப்பெய்வதாகும் விளை பொருள் மிகுந்து நாடு நலனுறுவ தாகும்.

"கோல் நிலை திரிந்திடிற் கோள்நிலை திரியும்.
கோள் நிலை திரிந்திடின் மாரி வறம் கூறும்
மாரி வறங்கூறின் மன்னுயி ரில்லை
மன்னுயி ரெல்லாம் மண்ணாள் வேந்தன்
தன்னுயி ரென்றும் தகுதியின் றூதம்" மணிமேகலை.

நாட்டிலுள்ளா ரெல்லாரும் முயன்று செல்வப் பொருளைத் தேடவேண்டும். இந்நாட்டிலே இந்நகரிலே இந்தவூரிலே யார் செல்வம் உடையவர் என்று அறிய அயல் நாட்டவன் ஒருவன் வந்து இவன் ஒருவன் என்று ஒருவிரலைமடக்கினால் அணிவிரலை மடக்க மாட்டாதவனாய் மயங்கும் படியாக எல்லோரும் ஒரேநிலையராய் இருத்தல் வேண்டும் செல்வப்பொருளைக் கொண்டு தான் கல்விப் பொருளை வளர்க்கவேண்டும். கல்வி கற்றல், அறிவுநூற் பொருளினைக் கற்றல் வேண்டும் கல்விப்பொருளே கண்ணுமாகும், "கைப் பொருள் கொடுத்தும் கற்றல் கற்றபின் கண்ணுமாகும்" சீவக சிந்தாமணி

செல்வப்பொருள் தன்னின் வேறாகஉள்ளது. இத்தகைய செல்வத்தினைப் பகைவர், கள்வர் முதலியோர் கைப்பற்றலுங் கூடும். பிறர்க்கீயுங்கால் குறைவுபடுவது, கல்விப்பொருளோ என்னின் தன்னின் வேறாகாதது. உள்ளமாய நிலைக்களத்தே ஒன்றியிருப்பது. பகைவர்கள் முதலியோராலே கைப்பற்ற ஒண்ணாதது. பிறர்க்கீயு மடத்து மேல் மேலும் வளர்வது கல்வியால் அறியாமை அகலும். அறிவு வளரும். அறிவும் இயற்கையறிவு செயற்கையறிவு என இரு வகைப்படுவது. சென்றபிறவிகளிலேகற்ற கல்வியால் உண்டாய அறிவு. இப்பிறவியிலும் இயற்கையாக உண்டாவது. செயற்கை யறிவாவது இப்பிறவிலேயேகற்ற கல்வியான் உண்டாய அறிவு. இப்பிறவியிலே கல்லாத ஒருவனும் முற்பிறவியிலே கற்ற கல்வியறிவின் தொடர்பால் உண்டாய நுண்ணிய அறிவுடைனாதலும் கூடும். "கல்லாதானொட்பம் கழிய நன்று"—குறள். செயற்கை யறிவின் திண்மையின்மையால் அந்த நுண்ணறிவால கண்ட நுண்பொருளை ஏதுக்களாலும், எடுத்த மொழியாலும் நிலைநாட்டிப்பேச இயலாது, எனவே கல்வி முந்துறாத நுண்ணுர்வே இன்றாம். கேட்போரின்றிப் பேசுவோரில்லாதது போல. கற்றவர்களே கண்ணுடையராவர். கல்லாதவர் முகத்திலுள்ள கண்களிரண்டும் கண்களல்ல, புண்களே. மேன்மேலும் அறிவு நூல் களைக் கற்றவர்களே அறிஞர்களாய் அரசராலும் விரும்பப்பெறுவார்கள் அவர்கட்கு எந்த நாடும் தமது நாடாம் எந்த ஊரும் தமது ஊராம கெடுதலின்றிய சிறந்த செல்வம் கல்வியே. நுண்ணிய மாண்பமைந்த நூற்பொருளைக கல்லாதவனதெழுச்சியின் நலம் மண்ணால் மாட்சி மையுறப் புனைந்த பாவையது எழுச்சியின் நலனை ஒத்தது. கல்வி யறிவில்லாத ஒருவனிடம் செல்வப் பொருள் வந்து சேருமேல் அது அவனைக் கெடுத்துவிடும். ஒருவன் எந்தக் குடியிலே பிறப்பினும் கல்வி யறிவுடையனாவனேல் அவனே மேலிடத்திருப்பவனாவான். நல்லாசிரியரிடம் சென்று நன்கனம் கற்ற ஒருவன் சிற்சில நூல் களைத் தான் கற்க இயலும். பல அறிவு நூற்பொருள்களை அறிய இயலாது. எனவே அறிவுநூல்களைக் கற்றுக் கேட்டுணர்ந்த ஆன்றோர் பலரிடத்தும் சென்று அவர்கள் கூறும் அறிவு நூற்பொருள்களைக் கேட்டல் வேண்டும். அங்ஙனம் கேட்டலையும் ஓர் விழுச்செல்வமென்று நமது ஆன்றோர் நவின்றனர். (தொடரும்)

சைவசித்தாந்தம்.

சிவஞான போதம்.

அருட்டிரு. திருநீ. சண்முகானந்த சுவாமிகள்,
(மதுரை.)

முன் (ம 1 இ 8 ப 100) தொடர்ச்சி.

அற்றேல், யாது யாண்டொடுங்கும் அஃது ஆண்டுத்தோன்றும் என்னும் அவிநாபாவத்தால் உலகம் மாயையின்கண் ஒடுங்குதலின் அம்மாயையே உலகைத் தோற்றுவிக்கும் முதற் காரணமாகையாலும் இறைவன் நிமித்த காரணமாகையாலும் அவனிடத் தொடுங்குமென்றல் பொருந்ாது; அதுவுமன்றி எழுவகைத் தோற்றமாகவும் சிலர் செல்வராகவும் சிலர் வறியராகவும் இங்ஙன் காணப்படுதலின், தோற்றுவிக்கும் இறைவனுண்டெனில் அவன் யாவர் மாட்டும் ஒப்பக்கருணையுடையவனாதலின்றி விருப்பு வெறுப்புடையனாய் எம்மனோருள் ஒருவனவன் ஆவனன்றே! அவன் தோற்றுவிப்பது அவரவர் வினையாலெனின்:- தன் வயத்தானன்றி, வினைவயத்தாற்றோற்றுவிப்பானிறைவனாகான்; அதுவுமன்றி வினையே அமையும் இறைவன் வேண்டா. வினையும் மாயையும் சடமாகலின் அவற்றைத் தொழிற்படுத்துவான் வேண்டுமெனின், அற்றன்று.- பால் சுரந்து கன்றினை வளர்க்கவும், காந்தம இரும்பை இழுக்கவும் கண்டோமன்றே, ஆகலின் சடத்துக்கும் செய்தியில்லையென்பது பொருந்தாது. இன்னுங் குடத்தைவனையுங் குயவன் அவித்தையிற் கட்டுண்டுச் சிற்றறிவுடையனாய் வினைவயத்தனாயிருத்தலின், இவ்வுவமையாற்றுணியப் படுங்கடவுளும் படைப்பு முதலியன செய்யுங்கால் விகாரமெய்தி அதனிற் கட்டுற்று நிற்பன்.

மற்றுங் குடத்தையுங் குயவனையும் ஒருங்கு கண்டானொருவன், குடத்தைக் கண்டவழி இதுவும் வனைதற் கொருகருத்தாவையுடையதென அநுமித்துணர்வதுபோல, உலகம்ஒருகருத்தாவையுடையதென வழியளவையால் உணர்தற்கு முன் உலகத்தையும் படைப்பானையும் ஒருங்குடன் கண்ட தின்மையின் அவிநாபாவ மறிதல் கூடாமையால் அநுமானமே ஈண்டைக் கேலாதாம் என்னும் ஆசங்கைவரின்:- மாயையும் உலகமும் விதையும் முளையும் போலுமாகலின், விதைக்கிடமாகிய நிலங் குளிர்ந்தவழி அதன் கண் விதையுளதாக அதனின்றும் முளைதோன்றுமாறு போல, மாயையானது தனக்கு ஆதாரமாய் நின்று தோற்றுவிக்கும் இறைவனது சத்தியினிடத்துள்ளதாய் நிற்றலால் அச்சத்தி சங்கற்பித்தவழி அவரவர்வினைக் கீடாக அவ்வக்காரியங்களை அவ்வவ்வியல்பிற்பிறழாமல் பயக்கும் பெருமையுடையதாம்

ஆகலின் மாயையின் ஒடுங்கித்தோன்றிய வுலகம் அதற்காதாரமாய் நின்ற இறைவன் சத்தியின் ஒடுங்கித் தோன்றியதேயாம் எனவுணர்க. எனவே மாயை அநிர்வசனீயம் என்னும் வேதாந்திகளும், மாயை முதல்வனின் வேறுபொருளன்று என்னுஞ் சிவாத்துவித சைவர்களும் பாஞ்சராத்திரிகளும் மறுக்கப்பட்டவாறுங் கண்டு கொள்க. இனி வேட்டுவன் ஆதலை விரும்பும் புழுவிற்கு வேட்டுவன் விரும்பியவடிவினைக்கொடுக்குமாறு போல் இறைவனும் அவரவர் வேண்டும் உருவினைக் கொடுத்து வினைக்குத் தக்க பயன்களையும் ஊட்டுவனாகலின் அதுகொண்டு அவனது சுதந்தரத்திற்கு இழுக்கில்லை என்பதுங் கண்டுகொள்க. பால் சுரந்து வளர்க்குமாயின் உயிரற்ற ஆன் முலையினும் பால் சுரத்தல் வேண்டும். அஃதின்மையிற் சேதனமாகிய ஆவையின்றிப் பால் சுரக்காமையும், அங்ஙனமே காந்தம் இரும்பை இழுத்தலும் அவ்விரண்டனையும் ஒன்றுபடுத்தும் சேதனனையின்றி-யமையாமையும் உணர்ந்து கொள்க. இனிச்சங்கற்பத்தாலியற்றுவதும் காரணத்தாலியற்றுவதும் என வினைமுதல் இருவகைப்படுமெனவும், குயவன் காரணத்தாற் செய்வனன்றிச் சங்கற்பத்தாற் செய்யானென வும், இறைவன்சக்தி அவ்வாறன்றிச் சங்கற்பத்தால் எல்லாத் தொழிலுஞ் செய்யுமெனவும், சங்கற்பத்தாற் செய்யுந்தொழிலுக்கு அவித்தையிற் கட்டுண்டல் முதலிய குற்றங்களில்லையெனவும், உணர்க. அற்றாயின், உடம்பின்றித்தொழிலியற்றல் கூடாமையின் இறைவனும் உடம்புடையனாக வேண்டுமெனின்:— உருவின்றியவுயிர் உருவுடைப் பொருளாகிய உடம்பினையியக்குவது போன்று, உறுவின்றிய இறைவனும் தன்னுருவமாகிய உருவுடைப் பொருளாகிய வுலகை இயக்குதல் அமையுமாறுணர்க. இங்ஙனன்றி இறைவனுக்கு உருவமுண்டெனவுடன்படின் உருவமெல்லாங்காரியப் பொருளாகலின் அவ்வுருவினைத் தருவான் மற்றோர் இறைவன் வேண்டும், வேண்டவே அவனுக்கும் வேறோர் இறைவன் வேண்டுமென்று அநவஸ்தையாய் (வரம்பின்றி யோடுதலாய்) முடியுமென்றுணர்க.

இனிச் சிறிதாகிய மடைப்பள்ளியின் புகையும் மலைப்புகையும் வேறுபாடுடையனவேனும், சாதிசாமானியம்பற்றி மலையிற்புகை கண்டுழி நெருப்பைத் துணிதல் போன்று, செயப்படு பொருளையும் செயலையும் செய்வோனையும் ஒருங் குடன்கண்டவன் பிறிதோரிடத்துச் செயப்படு பொருள்களைக் கண்டுழிச் சாதி சாமனியம் பற்றி இதுவுஞ் செய்வோனை யுடைத்தென்று அநுமானத்தால் துணிதல் பொருந்துமாறுணர்ந்து கொள்க.

இவற்றை :—

1 "வித்துண்டா மூல முளைத்தவா தாரகமா
மத்தன்ரு ணிற்ற லவர்வினையால்—வித்தகமாம்
வேட்டுவனா மப்புழுப்போல் வேண்டுருவைத் தான்கொடுத்துக்
கூட்டானே மண்போற் குளிர்ந்து" —என்றும்

2 "நோக்காது நோக்கி நொடித்தன்றே காலத்திற்
ருக்காது நின்றுளத்திற் கண்டிறைவ—ஞக்காதே
கண்ட நனவுணர்விற் கண்ட கனவுணரக்
கண்டவனி லிற்றின்ருங் கட்டு" —என்றும்

வரும் மெய் கண்ட தேவனர் திருவாக்கானும்,

"உலகமே உருவமாக யோனிக ளுறுப்பதாக
விலகுபே ரிச்சாஞானக் கிரியையுட் கரணமாக
வலகிலா வுயிர்ப்புலங்கட் கறிவினை யாக்கியைந்து
நலமிகு தொழில்களோடு நாடக நடப்பனுதன்"

எனவருஞ் சிவஞான சித்தியாரானுங் கண்டு கொள்க.

இனி மூன்ரும் அதிகாரணம் வருமாறு:- இரண்டாம் அதி கரணத்தில் உலகம் தானே தோன்றியழியு மென்னும் புத்தர் முதலி யோரையும், காரணக் கடவுளைச் சங்கார கருத்தாவின்வேறெனக் கூறும் பாஞ்சராத்திரி முதலியோரையும் மறுத்துச் சங்காரக்கடவுளே முத்தொழிற்கும் காரணமெனச் சாதித்த பின்னர், தேர் முதலாயின பலர் கூடிச் செய்யக் காண்டலின் அவற்றினும் அதிவிசித்திரமான உலகிற்கு முதற்கடவுளர் பலர் உளரெனக் கொள்ளும் அநேக ஈஸ் வரவாதிகள் மதம்பற்றி நிகழுங் கடாவை யாசங்கித்துச் சங்கார கருத் தாவே முதற் கடவுள் ஏனையோர் முதற் கடவுளல்லர் எனச் சாதித் தற் கெழுந்தது இவ்வதிகரணமெனக் கண்டுகொள்க.

தேர் முதலாயின பலராற் செய்யப்படினும் பலரும் ஒருவன் ஏவல்வழி நின்றே செய்வராகலானும், வேதத்துட் கூறப்பெற்ற காரண வாக்கியங்களுட் சுட்டுணர்வினர் ஆகிய நாரணன், இரண்ய கர்ப்பன், இந்திரன் அங்கி, சூரியன் முதலியோரைக் காரணமென்றது, குயவன்போல அவாந்தர காரணமாதல் பற்றியே யாகலின், அவை யெல்லாம் இடவாகு பெயராய்ச் சங்காரகாரணனுகிய முதற்கடவுளையே யுணர்த்தி நிற்குமாகலானும், செய்தும், செய்வித்தும், எல்லாத் தொழிற்கும் வினைமுதலாய் நிற்கும் முதற்கடவுளாவான் சங்கார கருத்தா வொருவனே என்பது ஐயந்திரிபின்றித் துணியப்பெறும்.

(தொடரும்)

குறிப்பு.

"துறவி" என்னும் திங்களிதழில் வெளியிட கட்டுரை எழுதியனுப்பும் துறவிகள் நல்ல கடிதத்தில் தொடர்பு எழுத்தில்லாமல் எழுத்துக்களை நன்கு தெரிந்து கொள்ளும்படி தனித்தனியாக ஒவ்வொரு கடிதத்திலும் ஒரேபக்கத்தில் எழுதி ஒவ்வொரு தமிழ் மாதம் 15உக் குள் அனுப்பிவைக்கும்படி வேண்டுகின்ரேம்.

அவிரோத வுந்தியார்.

தவத்திரு. சுவாமி முக்தானந்தர அவர்கள்
(சங்கமூர்த்தி, ஆனந்தாஸ்ரமம், வியாசர்பாடி, சென்னை.)

முன் (ம l இ 8 ப 108) தொடர்ச்சி

வீடுபேறு ஞானத்தா லன்றிக் கூடாதெனல் :—

உருவையோ, அருவையோ? ஒளியையோ, வெளியையோ இருளையோ, மருளையோ ? பொருளெனக் கருதி ஏமாற்றமடையாமல் ; எங்கும் பரந்தும், எப்பொருளினுஞ் செறிந்தும், உள்ளொளிக் குள்ளொளியாய் நிறைந்தும், மிக மிகக் கரந்தும் நிலவும், தானாகிய பொருளை உள்ளவாறு ஒழிவறக் காணும் வேட்கை மேலிட்டு இடையறாத கவலையுற்றமனதை, ஆசிரியர் காட்டியருளிய குறிப்பின்படி, உள்ளில் அலைவற நிறுத்தல் வேண்டும். இஃது ஒரு பொழுதல்ல நீள் பொழுது நிறுத்தப் பழகுதல் வேண்டும். இதிற் பயின்று, பதைப் பற்று நிற்கும் மனமே தாரணை கைவரப்பெற்ற மனமாகும். இம் மனந்தான், தானாகும் ஆத்மாவைத் தண்டும் மாற்றலுடையதாகும்.

இல்பாகவே வரையற விரிந்துள்ள ஆன்மாவாகிய தன்னை, இம்மனமோ? சென்று எல்லைகாண வல்லது என்னில்? ஆன்மக் காட்சி கருதி, எழுந்த வண்ணமுள்ள எண்ணத் தொடரில், முன்னர் முன்னர்ச்சென்ற சென்ற எண்ணங்கள், பொருளைச் சேர்ந்தனவாகக் கருதும்படி, குறித்தவிடம் சென்று, நெருங்க நெருங்கத், தேய்ந்து கரைந்து மறைந்து விடுவனவாம். சிலவேளை சேர்ந்தது போன்றும் இருக்கும். இதற்கிடையில், பழைய வாசனைகள் வந்து தாக்கி இடைமறித்துத் தொடர்பை மறுக்கவுங் கூடும். அங்ஙனம் உள்ள இடைமறிப்புப் புலப்படா வண்ணம் விரைந்து கிளப்பி, விரைந்து செலுத்தவும் வேண்டும். இதுதான் தியான மெனப்படுவது. இடைமறிப்பில்லாத எண்ணவொழுக்கே, ஒரு முனைப்பாய்ச்ச லெனப்படும். இதனை ஏகாக்ரம் என்பர் இந்த நிலைதான் சமாதி. இங்ஙனம் இடையறாமற் செல்லும் எண்ணம், ஆன்மாவிற் கலந்து, கரைந்து, எண்ணமும் எண்ணப்பட்ட பொருளுமாகிய இருமைப் பார்வையும் மறைந்த பொழுது, உள்ள நிலையே ஞானமாகும் இதனாலேயே வீடுபேறு கூடும் என்பதனை, உந்தியார் வலியுறுத்துவது. ஈண்டுணர்வாம்.

அ—உந்தியார் :—

"வீடுஞா னத்தன்றி மேவொணு தாகையாற்
கூடுவோ னந்தவாழ் வுந்தீ பற
கோதின்மெய்ஞ் ஞானியென் றுந்தீ பற"

பொருள் :— 'வீடு'—பண்டு மேன்று மின்றும் ஒரே படித்தா, யுள்ள தன்னிலையாகிய பேரின்ப வாழ்வாம் வீடானது, 'ஞானத்து அன்றி'—மெய்யுணர் வொன்றினுலேயே பேறலாமே யல்லாமல்' ('சரியை முதலாக முன் கூறப்பட்டுள்ள' படிகளால்) 'மேவொணுது' —பேறுதல் கூடாதது ஆம்; 'ஆகையால்'—(மெய்யுணர் வோன்றே வீடு பேற்றிற்கு நேர்படி) யாதலினுல்; 'அந்தவாழ்வு'—(உள்ள மலங் கழிந்து ஒழியாத பேரின்ப வெள்ளத்தில் துளைந்து துளைந்து மூழ்கி மூழ்கிக் கரையிலாக் களிபேருவகையாம்) அத்தகைய வாழ்வை, 'கூடுவோன்'—உற்று நிற்கும் பேருமை வாய்க்கப் பேற்ற பேரியோனே 'கோதில்'—'உடல் போருள்' 'உட்பற்றுப் புறப்பற்று' உற்ருர் மற்ருர் வேண்டுவ வேண்டாமை' முதலிய குற்றங்கள் சிறிதுங் காணப்படாத தாகிய' 'மேஞ்ஞானி'—மேய்யுணர் வாகுந் தன்னுணர்வுள்ளோன் ஆவன்' 'என்று'—எனக் கூறிக் கோண்டே' உந்திப்பறவுங்கள் சிறுமியர்காள்! என்கின்றது.

எடுத்துக்காட்டு.

சிவஞான சித்தியார் :—

"ஞானத்தால் வீடென்றே நான்மறைகள் புராணம் நல்ல
ஆகமங்கள் சொல்ல, அல்லவா மென்னும்;
ஊனத்தா ரென்கடவார் அஞ்ஞானத்தா லுறுவதுதான்
பந்தம், உயர் மெஞ்ஞா னந்தான்;
ஆனத்தால் அதுபோவது அலர்கதிர்முன் இருள்போல்
அஞ்ஞானமறப் பந்தமறும், முத்தியாகும்"

திருமந்திரம் :—

ஞானத்தின் மிக்க தவநெறி நாட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமும் நன்றன்று
ஞானத்தின மிக்கவை நன்முத்தி நல்காவால்
ஞானத்தின் மிக்கார் நரரினமிக் காரே

பிரபு லிங்க லீலை :—

உரைசெயிற் பரமஞானம் ஒன்றுமே முத்திக்கேது
சரியைநற் கிரியை யோகம் தாமொரு மூன்றும் ஞான
மருவுதற் கேது வென்றே மறைபுகன் றுரைக்கு மிந்தக்
கருவியைப் பொருளென் றெண்ணிக் களிப்பவர் கயவரன்-
றே"

(தொடரும்.)

"என்கடன் பணி செய்து கிடப்பதே"

(திரு. சுவாமி வடிவேலனார், குடியாத்தம்)

திருச்சிற்றம்பலம்,

நன்க டம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்க டம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்க டன்னடி யேனையுந் தாங்குதல்
என்க டன்பணி செய்துகி டப்பதே.

திருச்சிற்றம்பலம்.

என் கடன் பணிசெய்து கிடப்பதே என்னும் இத்தலைப்பு திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரமாகிய மேற் குறிப்பிட்ட பாடலின் ஈற்றடியாய் விளங்குவதாகும்.

இப்பகுதி சிறந்த நல்லுணர்வைத் தரும் பகுதியாய் அமைந்திருத்தலின் இதுபற்றி ஆராய்வது இன்றியமையாததாம். ஆதலின் சிறிது ஆராய்ந்து எழுத முன் வந்தனன்.

வீட்டினையடைய அவாவுற்றார்க்கு வழி நான்கு. அவை சன்மார்க்கம், சகமார்க்கம், சற்புத்திரமார்க்கம், தாதமார்க்கம் என்பன. இவற்றை விளக்கி நாட்டிற் கறிவுறுத்தவந்தவர்கள் சைவசமயாசாரியர் களாய நால்வரும் என்ப. தாதமார்க்க வழியொழுகியவர். திருநாவுக்கரசு சுவாமிகளாதலின் அவர் திருவாக்கினின்று அதனை விளக்க எழுந்ததே இவ்வருள்மொழி. இவ்வாறே பிறவிடங்களிலும் கூறப்பட்டுள்ளன. ஆங்காங்குக் கண்டு கொள்க.

கடன் என்பது கடமை என்னும் பொருளில் அமைந்து விளங்குகின்றது. சிலர் கடன் என்பதற்கு முன் வாங்கியதைத் திரும்பக்கொடுத்தல் என்பதாக நினைக்கலாம். முன்னர் வாங்கியதைத் திரும்பக் கொடுக்கவேண்டிய கடமை அதன் கண் அமைந்திருத்தலால் அதுவும் இப்பொருளே யாதல் சித்திக்கிறது.

என் கடன் பணி செய்வதே என்னாது செய்து கிடப்பதே என்று கூறியிருப்பதில் பல அழகிய கருத்துக்கள் அடங்கியிருக்கின்றன. ஒரு செயலிற்றலைவிடுங் காலத்திலே அச்செயல் நன்மை தருமா? தீமை தருமா? பயன் உண்டா? இல்லையா? இசை வருமா? வசை வருமா? என்பனவாய ஒன்றையும் கருதாமல் பணி செய்ய வேண்டும் என்ற ஒரே கருத்தை உள்ளத்திற் கொண்டு செய்தலாகிய பெருநோக்கத்தை விளக்குகின்றது.

மனம் செயலிற்றலையிடுங் காலத்து மேற் காட்டியவாறு நன்மை தீமைகளையும், பலா பலன்களையும் கருதுவது இயல்பு. இங்கு அவைகளைக் கருதாது செய்வது என்பது மட்டுமின்றித் தனக்கு ஒரு வித சுதந்திரம் இன்மையையும் கூட விளக்குவதாக அமைந்து விளங்குகின்றது.

பணி.

திருநாவுக்கரசு சுவாமிகள் தம் நிலையில் தமக்காகக் கூறியிருப்பாராயினும் அவை நமக்கறிவுறுத்த வந்த உபதேச மொழியாகக் கொண்டு அவைகளை நம் அநுபவத்திற் கொள்ள முன்வர வேண்டும்.

பணி என்னும் பகுதிக்கு இறைவனுக்கும் இறைவன் ஆலயத்திற்கும் மாத்திரம் பணி (தொண்டு) செய்வது என்று பொருள் கொள்ளுதல் கூடும். பணி என்பதற்கு அதுமட்டுமே பொருள் அன்று ஒவ்வொரு உயிரும் இறைவன் எழுந்தருளியிருக்கும் ஆலயமாதலின் உயிர்கட்கு இயற்றும் பணியும் அடங்கும் எனக்கொள்ளவேண்டும். இறைவன் ஆலயங்கட்கும் இறைவனுக்கும் செய்யும் பணியைக் காட்டிலும் உயிர்கட்கு இயற்றுவதே மேன்மையுடையது.

"படமாடக் கோயில் பரமர்க்கொன் றீயின்
நடமாடுங் கோயில் நம்பர்க்கங் காகா
நடமாடுங் கோயில் நம்பர்க்கொன் றீயில்
படமாடக் கோயில் பரமர்க்கங் காமே" —என்னுந்

திருமந்திரச் செய்யுளும் இக்கருத்தையே வலியுறுத்துகின்றது.

பணிசெய்யமுன் வருபவர்கள் விரும்புவது முத்திப்பேறேயாதலின் உயிர்கட்குத்தாம் செய்யும் தொண்டினை பலன் ஒன்றனையும் விரும்பாது (நிஷ்காமியமாகச்) செய்யின் அதுவே முத்திப் பேற்றைத் தருமாதலின், உயிர்கட்கியற்றும் பணியொன்றுமே எளிதிற் செய்வதாயும் பெரும் பேற்றைத் தருவதாயுமிருக்கின்றது என்பதை அறியலாம். உயிர்கட்கியற்றும் பணியேமுத்திப் பேற்றையுந் தரும் என்பது பண்டைக்காலத்துப் பெரியோர்கள் கொண்ட துணிபு. பின் வந்த ஆசிரியர் தாயுமானாரும் அப்பேற்றையே மிக விரும்பி

"அன்பர்பணி செய்யஎனை ஆளாக்கி விட்டு விட்டால்
இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே". —என்று

கூறுகின்றார்.

இப்பாடலின் மூன்றாவது அடியில் தன்கடன் அடியேனையுந் தாங்குதல் என்று கூறுகின்றார். அதில் உள்ள இழிவு சிறப்பும்மை உலகிலுள்ள மற்றைய எல்லா உயிர்களோடு ஒன்றுக்கும் பற்றாத சிறியேனையும் தாங்குதல் என்னும் குறிப்பினைக் காட்டுகின்றது.

(தொடரும்)

யோக சிகோப நிஷத்—தமிழ் பொழிப்புரை.

தவத்திரு திரிமூர்த்தி சுவாமிகள்,
(ஸ்ரீ சாது சுவாமிகள் ஆஸ்ரமம், பழனி.)

முன் (ம l இ 8 ப 112) தொடர்ச்சி

(அ...கை) யோகசித்தியுள்ளவன், ஜீவன் முக்தன் இவர்களின் குறியைக் கூறல்.

காசியை நோக்கிச் செல்கின்ற வழிப்போக்கர்கள்-வழியில் பல்வேறு தீர்த்தங்களேயும், பல்வேறு வழிகளேயு', பல்வேறு பயன்களேயும் எங்ஙனங் காண்கின்றனரோ, அங்ஙனமே விருப்பு வெறுப்பற்ற முக்தனிடத்தில் பலசித்திகள் தாமே உண்டாகின்றன. அங்ஙனமே யோகவழியிலும் கூட்டமான சித்திகள் தோன்றுகின்றன. பரிசைஷயிற்றேர்ந்த கம்மியர்களால் தங்கம் எங்ஙனம் அறிந்து சொல்லப்படுகிறதோ அங்ஙனமே ஜீவன் முக்தனேயும், சித்தனேயும் சித்திகளால் அறியத்தக்கது. எப்பொழுதாவது அச்சித்தனுக்கு உலகை கடந்த செயல்வெளிப்படுகின்றது. அத்தகைய சித்திகளின்றிய மனிதன் கட்டுப்பட்டவனென்று அறிவாய். (160)

(அ....கை) ஞானிக்கு உடலுள்ள பொழுதே விதேகமுக்தியினடைவு கூறல்.

எவன்மூப்பு, இறப்பு, களின் நீங்கிய உடலுள்ளவனே, அவனே ஜீவன் முக்த னெனப்படுவன். மாடு, கோழி, புழுமுதலியவைகள் மறித்தே விடுகின்றன, அவைகட்கு உடலே விடுவகால் முக்தியுண்டாமா என்ன ? யோகிக்கு பிராணன் வெளிப்படுவதே இல்லே. ஆகையால் உடல் கீழ் வீழ்வதில்லே; உடல் வீழ்ச்சியால் யாதொரு முக்தி யுளதாமே அது முக்தி எனப்படுவதில்லே. மற்றோ, கொல்லப்படுகிறது. எங்ஙனம் நீரின் திரட்சியே உப்புக்கட்டியாமோ, அங்ஙனம் பிரம்மமே உடலாய்ச் சமைகின்றது' எப்பொழுது இவற்றில் வேற்றுமையுணர்வு இன்றியவனுமோ, அப்பொழுதே, அவன் முக்தன் எனப்படுகிறன். கடலில் குமிழிகள் போன்று, பிரம்மத்தில் உடல்களும் புலன்களும் வேற்றுருவாயின, ஆகையால் பிரம்மமே உடலாயிற்று. என்பது அறியவும்.

(அ....கை) சிற்றுருவும் பேருருவும் சிவாலய மெனக் கூறல்.

உடல்-பத்துவாயிலுள்ள ஊராகவும், பத்து நரம்புகளாலாகிய பெருவழி உள்ளதும், பத்து காற்றுகளால் நிறைந்ததும், பத்து புலன்களாகிய வேலையாட்களையுடையதும், ஆருதாரச் சக்கரங்களுக்கு உள்ளிடமாயிருப்பதும், ஆறு ருதுக்கள் தோன்றுங் காடாயுள்ளதும் காமகிரி முதலிய பீடங்களாற் பரவியதும், நான்கு வேதங்களால் விளங்குவதும், பிந்து நாதங்களைப் பெரியலிங்கமாக வுடையதும், சிவசக்திகள் இருக்குமிட மானது மான இந்தவுடல் சிவாலயமென்றே சொல்லப்பட்டது. எல்லாவுயிர்களும் விரும்பிய சித்தியைக் கொடுப்ப-தெனவும் அறிக. (167)

(அ...கை) ஆருதாரங்களையும் நான்கு பீடங்களையும் விரித்துக் கூறல்.

மலவாயிலுக்கும், நீர் வாயிலுக்கும் நடுவிலுள்ளது மூலாதார மாகிறது. அதுவே ஜீவவுருக்கொண்ட சிவனுக்கு இருப்பிடமாகச் சொல்லப்படுகிறது. எதில்குண்டலினி எனப் பெயருள்ள பராசக்தி நிலைபெற்றுளதோ, எங்கிருந்து பிராணன்தோன்றுகிறதோ, எங்கிருந்து மூலக்கனல் வெளிப்படுகின்றதோ, எதிலிருந்து பிந்துதோன்றுகிறதோ எதிலிருந்து நாதம் வெளிப்படுகிறதோ, எதிலிருந்து ஹம்ஸமந்திரம் தோன்றுகிறதோ, எதிலிருந்து மனம் உண்டாகிறதோ, அத்தகைய பெருமையுள்ளதும், விரும்பிய பயனைக் கொடுப்பதுமான அது காமகிரி பீடமென்று அறிக.

குறியினடியில் அறுகோணமுள்ள சுவாதிட்டானச் சக்கரம் உளது. கொப்புளில் பத்திதழுள்ள மணிபூரக சக்கரம் உளது, மார்பில் பன்னிரண்டிதழுள்ள மகிமை பொருந்திய அனுகதசக்கரமுளது. அதுவே பூர்ணகிரி பீடமென்று அறிக. கண்டகூபத்தில் பதினறு இதழுள்ள விசுத்தி சக்கரமுளது, அதில் ஜாலந்தர பீடமும் உளதென்று அறிக. புருவங்களின் நடுவில் இரண்டிதழுள்ள சிறந்த ஆஞ்ஞாசக்கரமுளது. அதற்குமேல் உட்டி-யாணபீடம் நிலைபெற்றுள்ளது என அறியவும். முதலிலுள்ள மூலாதாரத்தில் பிருதிவி நாற்கோணமாக இருக்கிறது. அதற்கு பிரம்மா, அதிதேவதை, கொப்புளில் அப்புதத்துவம் அறைச்சந்திர வடிவாக வுளது. அதற்கு விஷ்ணு அதிதேவதை, மார்பில் நெருப்பு முக்கோணவடிவாக உளது. அதற்கு அதிதேவதை உருத்திரன், கண்டத்தில் காற்று அறுகோணவடிவாய் உளது. அதற்கு அதிதேவதை மகேசன், புருவநடுவில் ஆகாயம் வட்டமாக உளது. அதற்கு அதிதேவதை சதாசிவன், புருவங்களின் நடுவில் நாதவடிவாய் மனம் உளது என்று அறியவும், (178)

முதல் அத்தியாயம் முடிந்தது. (தொடரும்.)

REGD. No. M. 6630.

அச்சுரிமை: ந. வேணுகோபாலன் ஸ்ரீ ஜயலக்ஷ்மி பிரஸ், திருவண்ணுமலை
ஆசிரியரும், வெளியிடுபவரும்: சுவாமி சொருபானந்தா, கிழ்ப்பாலூர்.